**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**
**மேட்டூர் நகராட்சி**

நிகழும் ஸ்ரீ சுபகிருது வருடம் ஆனி மாதம் 15 ம் தேதி ஆங்கில ஆண்டு 30.06.2023ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சாதாரண கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**நாள் : 27.06.2023**
**இடம்: மேட்டூர் அணை.**

**நகர்மன்ற தலைவர்,**
**மேட்டூர் நகராட்சி.**

**மன்றப்பொருள்**

1. நகராட்சி ஆணையாளர்(பி) அவர்களின் ஜீன்–2023 மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண். 371 நாள்.30.06.2023**
**பதிவு செய்யப்பட்டது.**

2.மேட்டூர் அணையின் நீர் திறப்பதற்காக 12.06.2023 மாண்புமிகு முதலமைச்சர் வருகையை ஒட்டி மேற்கு பிரதான சாலையில் உள்ள வேகத்தடைகளை ( Speed break)அகற்றவும் மற்றும் கான்கிரீட் Patch செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.30000/ இச்செலவினத்தை இந்நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2012/2021/இ1)**

**தீர்மான எண். 372 நாள்.30.06.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

3. மேட்டூர் நகராட்சியின் பொது நிதியின் கீழ் தங்கமாபுரிபட்டிணம் குடிநீர் கசிவுயினை சரிசெய்யும் பணிக்கு நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி நாள்.02.05.2022 இன் படி குடிநீர்பணியின் அவசியம் கருதி இப்பணிக்கு ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | M/S Siva Sakthi Vinayaya Construction,Salem | 176017.06 | (–) 0.33% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | Thiru. K.Govindhan, Poosaripatty,Salem | 180068.00 | (+) 1.96 % மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்படி பெறப்பட்ட இரு ஒப்பந்தபுள்ளிகளில் (–) 0.33% மதிப்பீட்டை விட குறைவாக அளித்துள்ள திருவாளர்.சிவசக்தி விநாயகா சேலம் அவர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1569/2023/இ1)**

**தீர்மான எண். 373 நாள்.30.06.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

4. மேட்டூர் நகராட்சிகுட்பட்ட சேலம் கேம்ப், ஒர்க்ஷப் கார்னர், பாரதி நகர், நீதிமன்ற வளாகம் ஆகிய இடங்களில் குடிநீர் குழாய்கள் உடைந்தும், வால்வுகள் பழுதடைந்தும் குடிநீர் அதிக அளவில் வீணாகிறது. எனவே மேற்படி பழுதுகளை சரிசெய்ய ஆகும்.உத்தேச செலவினம் ரூ.50000/ (ஐம்பதாயிரம் மட்டும்) இச்செலவினத்தை இந்நகராட்சியின் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2053/2023/இ1)**

**தீர்மான எண்.** 374 **நாள்.30.06.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**5.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**16**ல் பிட்டர்மேன் குடியிருப்பு பகுதியில் உள்ள ஆழ்துளை கிணறு மோட்டார் பழுதடைந்துள்ள நிலையில் அதனை சரிசெய்து மாற்றி அமைத்து பொது மக்களுக்கு குடிநீர் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளதால் உத்தேச செலவினம் ரூ.**40000** (நாற்பதாயிரம்) ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1787/2023/இ1)**

**தீர்மான எண்.** 375 **நாள்.30.06.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**6.** மேட்டூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**20**ல் காவேரி நகரில் அமைக்கப்பட்டிருந்து போர்வெல் குடிநீர் சிமெண்ட் கான்கிரீட் தொட்டி பழுதடைந்துள்ள நிலையில் அதனை அப்புறப்படுத்தி புதியதாக சின்டெக்ஸ் டேங்க் **2000** லிட்டர் அமைத்து பழுதடைந்த வால்வுகள் மற்றும் பைப்லைன்கள் புதியதாக மாற்றி அமைக்க உத்தேச செலவினம் ரூ.**60000** (அறுபதாயிரம்) ஆகும். இச்செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் பணிமேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 1787/2023/இ1)**

**தீர்மான எண்.** 376 **நாள்.30.06.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**7.** தமிழ்நாடு அரசிதழ் எண்.23 பகுதி II பிரிவு2 பக்கம் எண்.761, 762 நாள்.08.06.2022ல் கண்டுள்ளபடி மேட்டூர் நகராட்சிக்கு அருகில் அமைந்துள்ள பி.என்.பட்டி மற்றும் வீரக்கல்புதூர் ஆகிய இரண்டு வருவாய் கிராமங்களையும் இணைத்து மேட்டூர் கூட்டு உள்ளூர் திட்டப்பகுதி என நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 10(1) (b) ன் கீழ் அறிவிப்பு செய்யப்படுவதற்கு பொதுமக்களின் ஆட்சேபனை மற்றும் ஆலோசனை பெற உள்ளூர் தினசரி செய்தித்தாளில் பிரசுரம் செய்திட அதற்குண்டான தோராய செலவு ரூபாய் 50000 (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.202/2023/எப்1)

**தீர்மான எண்.** 377 **நாள்.30.06.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சி பகுதியின் யானைப்புல் தோட்டத்தில் உள்ள 370 தென்னை மரங்களுக்கு பொது ஏலம் அறிவித்தும் ஏலம் எடுக்க எவறும் முன்வராத காரணத்தால் தென்னைமரத்தில் உள்ள தேங்காய்கள் காய்ந்து கிழே விழுந்து கொண்டு உள்ளன எனவே 370 தென்னை மரத்தில் உள்ள தேங்காய்களை இந்நகராட்சி துறைமூலம் பிடிங்கி விற்பனை செய்து நகராட்சி கருவூலத்தில் செலுத்த மன்ற அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண். 378 நாள்.30.06.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

(ஒப்பம்)...திருமதி.கோ.சந்திரா
நகர்மன்ற தலைவர்
மேட்டூர் நகராட்சி

/உண்மை நகல் /

ஆணையாளருக்காக
மேட்டூர் நகராட்சி.